# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1792/21 - 2013 ජනවාරි මස 09 වැනි බදාදා - 2013.01.09

*1792/21 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இலக்கம் : 01/10/03/04.

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆம் திருத்தத்தின் 154 ஊ (5) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத்தை செய்துள்ளேன் என்பதனை ஊவா மாகாண ஆளுநர் கலுவாதேவகே நந்த மெதிவ் ஆகிய நான், இதன் மூலம் அறியத்தருகின்றேன் :-

ஊவா மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி, கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாடு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ அவர்கள்.

ஊவா மாகாண மாகாண சபையின் இளைஞர் அலுவல்கள், விளையாட்டுத்துறை சமூக நலனோம்புகை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, மின்சக்தி, வலுசக்தி, நெசவுக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில்துறை அமைச்சர் கௌரவ எம். செந்தில் தொண்டமான் அவர்கள் 2012.12.21 ஆந் திகதி முதல் வெளிநாடு செல்வதால் அவர் மீள இலங்கைக்கு திரும்பும் வரை மேற்குறிப்பிட்ட அமைச்சின் அமைச்சராக பதிற்கடமையாற்ற.

சீ. நந்த மெதிவ்,
ஊவா மாகாண ஆளுநர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2012, திசெம்பர் 21.

1 - 660

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.